# CBSE South Zone Hockey Tournament 2017-18

**Organized by**

**Satchidananda Jothi Nikethan Inter School, Mettupalayam**

PSBB K.K.Nagar under -19 boys' team participated in the CBSE South Zone Hockey Tournament organized from the 27th September to 1st October , 2017 was organized by Satchidananda International School mettupalayam. Our students won the bronze medal in this prestigious tournament. Tamilnadu, Telangana, Maharashtra Andhra, Kerala, Karnataka state teams took part in this tournament.

**Roving Reporters**

**KKN**






**சிபிஎஸ்இ தென் மண்டல ஹாக்கிப் போட்டி: 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 3 வது முறை சச்சிதானந்த ஜோதிநிகேதன் பள்ளி சாம்பியன்**

மேட்டுப்பாளையம், அக். 1– சிபிஎஸ்சி தென்மண்டல ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில், 19 வயதிற்கு உட்பட்டோருக்கான மாணவியர் பிரிவில், கல்லாறு சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி, மூன்றாவது முறையாக முதலிடம் பெற்று சாதனை படைத்தது.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தை அடுத்த, கல்லாறு பகுதியில் அமைந்துள்ள சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டு உறைவிடப் பள்ளியில், சிபிஎஸ்இ தென்மண்டல ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டிகள் செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதி தொடங்கி, அக்டோபர் 1ஆம் தேதி வரை நடைபெற்றன.

இப்போட்டிகளில், தமிழ்நாட்டிலிருந்து 17 பள்ளிகளும், கர்நாடகாவிலிருந்து 2 பள்ளிகளும், மகாராஷ்டிராவிலிருந்து 5 பள்ளிகளும், ஆந்திராவிலிருந்து 2 பள்ளிகளும், கேரளாவிலிருந்து 1 பள்ளி என மொத்தம் 27 பள்ளிகளின் மாணவ மாணவியர் 727 பேரும், அணி மேலாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் 63 பேரும் கலந்துகொண்டனர்.

கடந்த 27ஆம் தேதி நடைபெற்ற தொடக்க விழாவில், பள்ளிச் செயலர் கவிதாசன் கலந்துக்கொண்டு, போட்டிகளைத் தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினராக, மேட்டுப்பாளையம் சரக காவல்துறை ஆய்வாளர், சென்னகேசவன் கலந்து கொண்டார். நாக்அவுட் முறையில நடைபெற்ற, முதல் சுற்றுப் போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளிகள், லீக் போட்டிகளில் கலந்து கொண்டன.

19 வயதிற்கு உட்பட்டோருக்கான மாணவர் பிரிவில், கல்லாறு, சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி சாம்பியன் பட்டத்தைப் பெற்றது.

சென்னை வேலம்மாள் பள்ளி இரண்டாம் இடத்தையும், உடுமலையைச் சேர்ந்த சைனிக் அமராவதி நகர் பள்ளி மற்றும் சென்னை பத்மா சேஷாத்திரி பால பவன் பள்ளிகள் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

**3வது முறையாக**

**சாம்பியன்ஷிப்**

19 வயதிற்கு உட்பட்டோருக்கான மாணவியர் பிரிவில், கல்லாறு சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி முதலிடத்தையும், உதகை லாரன்ஸ் பள்ளி இரண்டாம் இடத்தையும் பெற்றன. சென்னை வேலம்மாள் பள்ளியும், நாக்பூர் விமல் டாய் பள்ளியும் மூன்றாம் இடத்தைப் பெற்றன.

17 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கான போட்டிகளில், பிவிபி கொடுகு வித்யாலயா பள்ளி முதலிடத்தையும், உடுமலை சைனிக் அமராவதி பள்ளி இரண்டாம் இடத்தையும் பெற்றன. சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளியும், நெய்வேலி ஜவஹர் வித்யாலயா பள்ளியும் மூன்றாம் இடத்தைப் பெற்றன.

17 வயதிற்கு உட்பட்டோருக்கான மாணவியர்பிரிவில்,மகாராஷ்டிராவின் ஐஆர்ஏ இன்டர்நேஷனல் பள்ளி முதலிடத்தையும், சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி இரண்டாம் இடத்தையும் பெற்றன. ஒசூர் மதனகொண்டபள்ளி மாடல் ஸ்கூல் மற்றும் கர்னாடகாவின் பெல்லாரி டிரீம் வோர்ல்ட் பள்ளிகள் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

இந்த போட்டியில், சென்னை பிஎஸ்பிபி பள்ளி உடற்கல்வி இயக்குனர் ரவிச்சந்திரன், பார்வையாளராக கலந்து கொண்டார். சிபிஎஸ்இ தென்மண்டல ஹாக்கி போட்டியில், 19 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில், மூன்றாவது முறையாக, சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி சாம்பியன் பட்டத்தை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அக்டோபர் 1ஆம் தேதி நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், தமிழ்நாடு ஹாக்கி பிரிவின் பொதுச்செயலாளர் ரேணுகாதேவி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளியின் நிர்வாக அறங்காவலர் ராமசாமி, பள்ளிச் செயலர் கவிதாசன், பள்ளியின் கல்வி ஆலோசகர் வெ.கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, பரிசளிப்பு விழாவிற்கு வந்திருந்தோரைப் பள்ளி முதல்வர் இரா.உமாமகேஸ்வரி வரவேற்றார். நிறைவாக, துணைச் செயலர் மு.ஞானபண்டிதன் நன்றி கூறினார். போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைப் பள்ளியின் உடற்பயிற்சி இயக்குநர் செந்தில் ராஜ்குமார் செய்திருந்தார்.